# 7. ஆறெழுத்துண்மை.

*பண் - கௌசிகம்.*

**எ**ண்ணில் பல்வித மாக விருந்திடு
மண்ணொ டைந்து வகைப்படு பூதமும்
பண்ணி வைத்துப் பராபர மாய்நிற்றல்
அண்ண லார்பெய ராறக்க ரங்களே. 1

**பூ**ரு வந்தக் கிணம்புகழ் வாருணம்
சீரு யர்ந்த வுதக்கடி சேணுநல்
பூர ணச்செய லிற்பொலி வுற்றுள்ள
ஆர ணன்பெய ராறக்க ரங்களே. 2

**து**ய்ய மூலமுங் குய்யமுந் தொப்புளும்
மெய்ய னாகத மும்மின் விசுத்தியும்
மைய மான லலாடமு மாய்நிற்கும்
ஐய னார்பெய ராறக்க ரங்களே. 3

**ஓ**து மாரண மாகம முன்னரும்
கோதி லாத புராண குலங்கணல்
நீதி யாமற நூனிக மங்களும்
ஆதி யின்பெய ராறக்க ரங்களே. 4

**ஊ**றி கந்தசைத் தோதி யழுங்கலை
நூறி நல்லக நோன்புறு வார்கட்காம்
கூற ருஞ்சத்த கோடிநன் மந்த்ரமும்
ஆறு ளோன்பெய ராறக்க ரங்களே. 5

**ஒ**ப்பின் மாவசி யஞ்செவ் வழைப்பொரு
துப்பு றாமோக னந்தம்ப னஞ்சொலத்
தப்பி லாதவுச் சாடன மாரணம்
அப்ப னார்பெய ராறக்க ரங்களே. 6

---

*3. **துய்ய** = தூய்மை யென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயரெச்சம்.*

**சு**த்த மான சுகப்பொரு ளொன்றனைச்
சித்த மீதிருத் தித்தினந் தோறுநல்
பத்தி செய்தவும் பர்க்கரு டந்தவை
அத்த னார்பெய ராறக்க ரங்களே. 7

**வி**ண்ட லத்துறை விஞ்சையர் கந்தர்வர்
தெண்டு டைத்தெருட் சித்தர் முனீசுரர்
கொண்ட வின்பு பெறற்கருள் கூர்ந்தவை
அண்டர் கோன்பெய ராறக்க ரங்களே. 8

**செ**ம்பொ றிக்கண் விழித்துச் சினந்தடற்
றும்பெ குத்தடி சூலம் பிடித்தெமன்
கெம்பு கிங்கரர் கன்மங் கெடுப்பவை
அம்ப ரன்பெய ராறக்க ரங்களே. 9

**நீ**ண்ட வாழ்வுடை நித்த வகத்தியன்
பூண்ட மாவனு பூதி புகன்றவன்
காண்டல் கூர்பலர் கண்ணா யிருந்தவை
ஆண்ட வன்பெய ராறக்க ரங்களே. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 15ஆம் தேதி ஆதித்தவாரம்.